**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நாடாளுமன்றம் ஜூலை 20-இல் கூடுகிறது

## மணிப்பூர் வன்முறை, பொது சிவில் சட்டம், தில்லி அவசர சட்ட விவகாரங்கள் எதிரொலிக்கும்

**புது தில்லி, ஜூலை 1:** பரபரப்பான அரசியல் சூழலில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் ஜூலை 20-இல் தொடங்கி ஆகஸ்ட் 11 வரை நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி சனிக்கிழமை அறிவித்தார்.

மழைக்கால கூட்டத்தொடரில் ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெற அரசியல் கட்சிகள் பங்களிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.



**மழைக்கால கூட்டத் தொடர், முதலில் பழைய நாடாளுமன்ற கட்டடத்தில் தொடங்கி, பின்னர் புதிய கட்டடத்துக்கு மாற்றப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**



மக்களவைத் தேர்தலில் பாஜகவை ஒருங்கிணைந்து எதிர்க்க முடிவு செய்துள்ள எதிர்க்கட்சிகள், இந்தத் தொடரில் பல்வேறு விவகாரங்களை எழுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மணிப்பூர் வன்முறையை எதிர்க்கட்சிகள் முக்கியமாக எழுப்ப வாய்ப்புள்ளது.

பொது சிவில் சட்டம், தில்லி நிர்வாகப் பணிகள் தொடர்பான மத்திய அரசின் அவசரச் சட்டம் ஆகிய விவகாரங்களும் எதிரொலிக்கும்.

நடப்பாண்டு இறுதியில் ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், தெலங்கானா, மிஸோரம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களும், அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தலும் நடைபெறவுள்ளன.

ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் தேர்தலை நோக்கிய மனநிலையில் இருப்பதால், தற்போதைய கூட்டத் தொடரில் விவாதங்கள் அனல் பறக்க வாய்ப்புள்ளது.

மழைக்கால கூட்டத் தொடர், முதலில் பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் தொடங்கி, பின்னர் புதிய கட்டடத்துக்கு மாற்றப்படும் என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய நாடாளுமன்றக் கட்டடம், பிரதமர் மோடியால் கடந்த மே மாதம் 28-இல் திறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**17 அமர்வுகள்:** மழைக்கால கூட்டத் தொடர் குறித்து நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி சனிக்கிழமை வெளியிட்ட ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

ஜூலை 20-இல் தொடங்கி ஆகஸ்ட் 11 வரை நடைபெறும் மழைக்கால கூட்டத்தொடரில், 23 நாள்களில் மொத்தம் 17 அமர்வுகள் நடைபெறவுள்ளன. சட்டமியற்றுதல் மற்றும் இதர விவகாரங்களில், ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெற அனைத்துக் கட்சிகளும் பங்களிக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**என்னென்ன மசோதாக்கள்?:** தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவும் மசோதா, பல்மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டத் திருத்த மசோதா, பெரிதும் எதிர்பார்க்கப்படும் எண்ம தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா, வனப் பாதுகாப்பு திருத்த மசோதா உள்ளிட்ட மசோதாக்கள் இந்தத் தொடரில் கொண்டுவரப்படும் என தெரிகிறது.

தில்லி அரசின் நிர்வாகப் பணிகள் தொடர்பாக மத்திய அரசு அண்மையில் பிறப்பித்த அவசரச் சட்டத்துக்கு மாற்றான மசோதாவும் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விவகாரத்தில், மத்திய அரசை எதிர்க்க பல்வேறு அரசியல் கட்சிகளிடம் தில்லியில் ஆளும் ஆம் ஆத்மி ஆதரவு திரட்டியுள்ளது. இந்த விவகாரமும் நாடாளுமன்றத்தில் அரசியல் புயலை கிளப்பக் கூடும்.

**பொது சிவில் சட்டம், மணிப்பூர் விவகாரங்கள்:** 'நாட்டில் அனைத்து சமூகங்களுக்குமான பொது சிவில் சட்டம் அவசியம்' என்று பிரதமர் மோடி சில தினங்களுக்கு முன் வலுவான கருத்தை முன்வைத்தார். இதையடுத்து, இந்த விவகாரம் குறித்த விவாதங்கள் சூடுபிடித்துள்ளன.

இதேபோல், வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் இரு சமூகத்தினர் இடையிலான வன்முறை நீடித்து வருகிறது. இதுவரை 100-க்கும் மேற்பட்டோர் பலியாகிவிட்டனர். இவ்விரு விவகாரங்களிலும் மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து குரலெழுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பரபரப்பாகும் அரசியல் களம்:** மக்களவைத் தேர்தலை கருத்தில் கொண்டு, முக்கிய எதிர்க்கட்சிகளின் முதல் உயர்நிலை ஆலோசனைக் கூட்டம், பிகார் தலைநகர் பாட்னாவில் அண்மையில் நடைபெற்றது.

இதில், பாஜகவை ஒன்றிணைந்து எதிர்க்க 17 அரசியல் கட்சிகள் முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், 'விரைவில் அடுத்தகட்ட கூட்டம் நடைபெறும்; அதில் கூட்டு வியூகம் வகுக்கப்படும்' என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

இதனிடையே, பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி.நட்டா, பாஜக அமைப்பு பொதுச் செயலர் பி.எல்.சந்தோஷ் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள், அரசியல்-அமைப்புரீதியிலான விவகாரங்கள் குறித்து சில நாள்களாக அடுத்தடுத்து ஆலோசனைகள் மேற்கொண்டனர்.

பிரதமர் மோடி திங்கள்கிழமை (ஜூலை 3) மத்திய அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்தவிருக்கிறார். இதனால், அமைச்சரவையிலும் கட்சியில் அமைப்புரீதியிலும் மாற்றங்கள் செய்யப்படலாம் என்ற ஊகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

## மழைக்கால கூட்டத்தொடரில் கூட்டுறவு சட்டத் திருத்த மசோதா

**புது தில்லி, ஜூலை 1:** வரும் 20-ஆம் தேதி தொடங்கும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில், பன்மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப்படும் என்று மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.



தொழில் புரிவதை மேலும் எளிதாக்கும் நோக்கில் இந்த மசோதா கொண்டுவரப்படுவதாக, அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி (ஜூலை 1), தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற 17-ஆவது இந்திய கூட்டுறவு மாநாட்டில் அமித் ஷா பங்கேற்றுப் பேசியதாவது:

கூட்டுறவுத் துறையை அடுத்த 25 ஆண்டுகளுக்கானதாக விரிவுபடுத்தும் நோக்கில், புதிய கூட்டுறவு சட்டத்தை கொண்டுவர மத்திய அரசு விரும்புகிறது. நாட்டில் கூட்டுறவு பல்கலைக்கழகத்தை நிறுவவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகம்-செயல்பாடு குறித்த கவலைகளுக்கு தீர்வு காணும் வகையில், அரசமைப்புச் சட்ட பிரிவுகளுக்கு ஏற்ப பன்மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது. இதுதொடர்பான மசோதா, எதிர்வரும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் கொண்டுவரப்படும்.

அரசியல் சாசன கட்டமைப்புக்கு உள்பட்டு, கூட்டுறவு சட்டத்தில் மத்திய-மாநில அரசுகளின் உரிமைகள் பாதிக்காத வகையில் சீரான தன்மையைக் கொண்டுவர அரசு முயற்சித்து வருகிறது.

நாட்டிலுள்ள தொடக்க வேளாண் கடன் சங்கங்கள், இப்போது பல்வேறு துணைச் சட்டங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. எனவே, ஒரேசீரான துணைச் சட்டங்களை பின்பற்றும் வகையில், மத்திய அரசு மாதிரி துணைச் சட்ட வரைவை உருவாக்கியது. இந்த வரைவை, 26 மாநிலங்கள்-யூனியன் பிரதேசங்கள் ஏற்றுக் கொண்டது மகிழ்ச்சியளிக்கிறது.

இதன்மூலம் நாட்டிலுள்ள 85 சதவீத தொடக்க வேளாண் கடன் சங்கங்கள், வரும் செப்டம்பர் மாதம் முதல் ஒரேசீரான துணைச் சட்டங்களைப் பின்பற்றவுள்ளன.

நாட்டில் தற்போது 55,000 தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் உள்ளன. அடுத்த 3 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கையை 3 லட்சமாக உயர்த்த வேண்டும் என்பதே இலக்கு. இதன்மூலம் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு தொடக்க வேளாண் கடன் சங்கம் இருக்கும்.

வரி விவகாரங்களைப் பொருத்தவரை, கூட்டுறவு நிறுவனங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சர்க்கரை கூட்டுறவு ஆலைகளின் ரூ.15,000 கோடி மதிப்பிலான வரி பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றார் அவர்.

# மரபணுசார் ரத்தசோகை நோய் ஒழிப்புத் திட்டம்

## பிரதமர் மோடி தொடங்கிவைத்தார்

**ஷதோல், ஜூலை 1:** மரபணுசார் ரத்தசோகை நோயை (சிக்கிள் செல் அனீமியா) 2047-ஆம் ஆண்டுக்குள் ஒழிப்பதற்கான தேசிய திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை தொடங்கி வைத்தார்.

தேசிய மரபணுசார் ரத்தசோகை ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசு அறிவித்திருந்தது. அதன்படி, அந்தத் திட்டத்தை மத்திய பிரதேசத்தின் ஷதோல் நகரில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான கொள்கைகளையும் சிறப்பு வலைதளத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.

அப்போது 3 கோடிக்கும் அதிகமானோருக்கு எண்ம வடிவிலான ஆயுஷ்மான் பாரத் அட்டைகளை விநியோகிக்கும் திட்டத்தையும் அவர் தொடங்கி வைத்தார். பயனாளிகள் சிலருக்கு எண்ம அட்டைகளையும் பிரதமர் மோடி வழங்கினார்.




மத்திய பிரதேச மாநிலம், ஷதோல் நகரில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், தேசிய மரபணுசார் ரத்தசோகை ஒழிப்புத் திட்டத்தை தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி. உடன், மாநில முதல்வர் சிவராஜ் சிங் செளஹான்.

மரபணுசார் ரத்தசோகை நோய்க்கு மருத்துவர்களிடம் ஆலோசனை பெறுவதற்கான அட்டைகளையும் சில பயனாளிகளுக்கு பிரதமர் மோடி வழங்கினார். அந்நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், 'மருத்துவமனைகளில் ரூ.5 லட்சம் வரை சிகிச்சை பெறுவதற்கு ஆயுஷ்மான் காப்பீட்டு அட்டை உதவும். மரபணுசார் ரத்தசோகை நோயால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களில் பாதி பேர் இந்தியாவிலேயே உள்ளனர். அப்படியிருந்தும் அந்நோயை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அந்நோயை 2047-ஆம் ஆண்டுக்குள் ஒழிப்பதற்கான துரித நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

**எதிர்க்கட்சிகளின் போலி வாக்குறுதிகள்:** காங்கிரஸ் உள்ளிட்ட குடும்ப கட்சிகள் தற்போது ஒன்றுசேர்ந்துள்ளன. அத்தகைய கட்சிகள் வழங்கும் போலியான வாக்குறுதிகளை மக்கள் ஒருபோதும் நம்பக் கூடாது. அக்கட்சிகள் தங்களுக்குள் சண்டையிட்டு வருகின்றன. அவை தற்போது ஒன்றிணைந்து தேர்தலை எதிர்கொள்வதாகக் கூறுவதற்குப் பின்னால் இருக்கும் அபாயத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இலவச மின்சாரம் வழங்குவதாக அக்கட்சிகள் கூறினால், மின் கட்டணத்தை அவை உயர்த்தும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இலவச பேருந்து பயணம் என அறிவித்தால், போக்குவரத்துக் கழகங்களை சீர்குலைக்கப் போகிறது என்பதையும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பெட்ரோலை மலிவு விலைக்கு வழங்குவதாகக் கூறினால், வரியை அக்கட்சிகள் அதிகரிக்கும். காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் வழங்கும் வாக்குறுதிகள், ஏழைகளை பாதிக்கும் வகையிலேயே இருக்கும். காங்கிரஸ் கட்சியானது கடந்த 70 ஆண்டுகளில் ஏழைகளுக்கு உணவு வழங்குவதில் தோல்வி அடைந்தது. ஆனால், பாஜக தலைமையிலான மத்திய அரசு கடந்த 9 ஆண்டுகளில் 80 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு உணவு தானியங்களை இலவசமாக வழங்கியது.

**ஏழைகள் பலன்:** குடும்பக் கட்சிகள் தங்கள் குடும்பங்களுக்காக மட்டுமே உழைக்கும். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் மக்களின் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. ஆனால், பாஜக ஆட்சியில் அமல்படுத்தப்பட்ட ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டத்தால் 50 கோடிக்கும் அதிகமான ஏழைகள் பலனடைந்தனர்.

ராணி துர்காவதியின் 500-ஆவது பிறந்த ஆண்டு நாடு முழுவதும் கொண்டாடப்படும். அதையொட்டி சிறப்பு தபால் தலையும் நாணயமும் வெளியிடப்படும். அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையிலான ஆவணப்படமும் உருவாக்கப்படும்' என்றார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# கர்ப்பிணிகளுக்கு 1,000 நல் நாள்கள் நிதியுதவித் திட்டம்

**ஆற்காடு, ஜூலை 1:** ராணிப்பேட்டை மாவட்டம், திமிரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு '1,000 நல் நாள்கள்' என்ற திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கைத்தறி, துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் சனிக்கிழமை தொடங்கிவைத்து நிதி உதவி வழங்கினர்.

விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி தலைமை வகித்தார். ஆற்காடு எம்எல்ஏ ஈஸ்வரப்பன் முன்னிலை வகித்தார். பொது சுகாதாரம், நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் திட்ட விளக்க உரையாற்றினார். அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ஆர்.காந்தி ஆகியோர் திட்டத்தைத் தொடங்கி வைத்து கர்ப்பிணிகளுக்கு நிதியுதவி வழங்கினர்.

பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியது:

திமிரி பகுதியில் 10,000 பேருக்கு மருந்து பெட்டகம் வழங்கப்படுகிறது. இன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் விபத்தில் பாதிக்கப்பட்ட 700 பேர் ரூ. 1 லட்சத்தில் சிகிச்சை பெற்றனர்.

தற்போது இதயம் காப்போம் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மலைக் கிராமங்களில் யாருக்காவது மாரடைப்பு போன்ற இதய நோய் ஏற்பட்டால், ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில், 14 கூட்டு மாத்திரைகள் உட்கொண்டு பாதிப்பிலிருந்து விடுபடலாம்.

வாழ்வின் முதல் 1,000 நல் நாள்கள் என்ற திட்டம் திமிரியில் தொடங்கப்பட்டுள்ளது.

இதில் பெண்கள் கருத்தரித்த நாள் முதல் குழந்தை பிறந்த 2 ஆண்டுகள் (1,000 நாள்கள்) வரை ஆரோக்கியத்துடன் பாதுகாப்பது இந்தத் திட்டத்தின் நோக்கம். இந்தத் திட்டத்துக்கு ரூ. 38 கோடியே 20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 1,000-க்கு 28-ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 13-ஆக உள்ளது. இதேபோல், மகப்பேறு இறப்பு இந்திய அளவில் 1 லட்சத்துக்கு 97-ஆகவும், தமிழ்நாட்டில் அது 54-ஆகவும் உள்ளது.

தமிழக அரசு தொடங்கியுள்ள இந்த திட்டத்தை உரிய முறையில் பயன்படுத்தி கர்ப்பிணிகள் பயனடைய வேண்டும் என்றார்.

அமைச்சர் ஆர்.காந்தி பேசியது: மருத்துவத் துறை தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. கல்வியிலும் சுகாதாரத்திலும் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட முன்னோடி மாநிலமாக உள்ளது. மக்கள் நலத் திட்டங்கள் கட்சி பேதமின்றி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வாழ்வின் 1,000 நல் நாள்கள் திட்டத்தின் மூலம் அரசு வழங்கும் ரூ. 5,000-ஐ தகுந்த முறையில் பயன்படுத்தி நல் உடல் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்றார்.

விழாவில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல இணை இயக்குநர் நிர்மல்சன், துணை இயக்குநர் மணிமாறன், திமிரி ஒன்றியக் குழு துணைத் தலைவர் ரமேஷ், பேரூராட்சி தலைவர் மாலா இளஞ்செழியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்**



ராணிப்பேட்டை மாவட்டம், திமிரியில் 1,000 நல் நாள்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்து கர்ப்பிணிகளுக்கு நிதியுதவி வழங்கிய அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ஆர். காந்தி. உடன் ஆட்சியர் ச.வளர்மதி உள்ளிட்டோர்.

# ஒவ்வொரு விவசாயிக்கும் ஆண்டுக்கு ரூ.50,000 மதிப்பிலான பலன்கள்

**புது தில்லி, ஜூலை 1:** 'வேளாண் துறைக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் ரூ.6.5 லட்சம் கோடியை வழங்குகிறது; ஒவ்வொரு விவசாயிக்கும் ஆண்டுக்கு ரூ.50,000 மதிப்பிலான பலன்கள் கிடைக்கின்றன' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

புது தில்லியில் 17-ஆவது இந்திய கூட்டுறவு மாநாட்டில் அவர் சனிக்கிழமை பங்கேற்றுப் பேசினார். அப்போது எதிர்க்கட்சிகள் அண்மைக்காலத்தில் விவசாயிகளுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை மறைமுகமாக விமர்சிக்கும் வகையில், விவசாயிகளுக்கு மத்திய அரசு அளிக்கும் உதவிகளைப் பட்டியலிட்டார். அவர் பேசியதாவது:

மத்திய அரசு விவசாயிகளுக்காக உர மானியம், உணவு தானியக் கொள்முதல், பிரதமர் கிசான் உள்ளிட்ட திட்டங்களை அமல்படுத்துகிறது. கடந்த 9 ஆண்டுகளில் மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதை மத்திய அரசு உறுதிப்படுத்தியுள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலையில் ஏராளமான உணவு தானியங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. பிரதமர் கிசான் திட்டத்தின்கீழ் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மிகப்பெரிய தொகை செலுத்தப்படுகிறது.

**பிரதமர் மோடி**



புது தில்லியில் இந்திய கூட்டுறவு மாநாட்டில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

விவசாயிகளின் வங்கிக் கணக்கில் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.2.5 லட்சம் கோடி செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் ஆண்டுக்கு தலா ரூ.6 ஆயிரத்தைப் பெறுகின்றனர்.

கடந்த 2014-ஆம் ஆண்டுக்கு முன் ஐந்து ஆண்டுகளுக்கான மொத்த விவசாய பட்ஜெட்டின் மதிப்பே ரூ.90 ஆயிரம் கோடிக்கும் குறைவு என்பதை வைத்துப் பார்க்கும்போது தற்போது அத்துறைக்கு எவ்வளவு பெரிய அளவில் நிதி ஒதுக்கப்படுகிறது என்பதை அறிய முடியும்.

விவசாயிகளுக்கான வாக்குறுதிகள் என்ன என்பதையும் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் என்ன என்பதையும் இது காட்டுகிறது.

நாட்டில் உள்ள ஒவ்வொரு விவசாயியும் ஆண்டுதோறும் ரூ.50,000 அளவுக்குப் பலன் பெறுவதை மத்திய அரசு உறுதிப்படுத்துகிறது. மத்திய பாஜக அரசின் ஆட்சியில் ஒவ்வொரு விவசாயியும் ரூ.50,000 என்ற அளவுக்குப் பலன் பெறுகிறார் என்று இதற்கு அர்த்தம்.

நான் என்ன செய்துள்ளேன் என்பது பற்றியே நான் பேசுகிறேன். சராசரியாக வேளாண் துறைக்கும் விவசாயிகளுக்கும் மத்திய அரசு ஆண்டுதோறும் சராசரியாக ரூ.6.5 லட்சம் கோடியைச் செலவிடுகிறது.

உலக அளவில் உரங்களின் விலை உயர்ந்திருப்பது விவசாயிகளை பாதிக்காமல் இருப்பதை மத்திய அரசு உறுதிப்படுத்தியுள்ளது. விவசாயிகளுக்கு 45 கிலோ உரம் அடங்கிய ஒரு பை ரூ.270க்கு கிடைக்கிறது. 45 கிலோ உரம் அடங்கிய ஒரு பை வங்க தேசத்தில் ரூ.720-க்கும் பாகிஸ்தானில் ரூ.800-க்கும் சீனாவில் ரூ.2,100-க்கும் அமெரிக்காவில் ரூ.3 ஆயிரத்துக்கும் கிடைக்கிறது. அனைத்து நாடுகளை விட நம் நாட்டில் உரம் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது.

கடந்த 9 ஆண்டுகளில் உர மானியத்துக்காக அரசு ரூ.10 லட்சம் கோடியைச் செலவிட்டுள்ளது. இதைவிட பெரிய உத்தரவாதம் இருக்க முடியுமா?

கடந்த 2014 முதல் விவசாயிகளுக்கு அவர்களின் விளைபொருள்கள் மீது உரிய விலை கிடைக்கச் செய்வதில் மத்திய அரசு தீவிரமாக உள்ளது. உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் விவசாயிகளிடம் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு ரூ.15 லட்சம் கோடியை வழங்கியுள்ளது.

உரத் துறைக்கு அண்மையில் ரூ.3.7 லட்சம் கோடி மதிப்பிலான திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது. அதேபோல கரும்பு விவசாயிகளுக்கு ஒரு குவிண்டால் கரும்புக்கு ரூ.315 வழங்கப்படுவதை அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா தன்னிறைவு பெற்றதாகவும் வளர்ந்த நாடாகவும் மாற கூட்டுறவுத் துறையின் பங்கு முக்கியமானது. வெளிப்படைத்தன்மைக்கு உதாரணமாகவும், ஊழலற்ற நிர்வாகத்தைக் கொண்டதாகவும் கூட்டுறவு அமைப்புகள் மாற வேண்டும். அவை டிஜிட்டல் சாதனங்களை மிகப்பெரிய அளவில் பயன்படுத்த வேண்டும்.

எண்ணெய் வித்துகள், பருப்பு வகைகள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் கூட்டுறவு அமைப்புகள் பாடுபட வேண்டும். இதன் மூலம் சமையல் எண்ணெய்களில் நாடு தற்சார்பை எட்ட உதவ வேண்டும் என்றார்.

# 2047–இல் நாட்டிலுள்ள பட்டய கணக்காளர்களில் 50% பேர் பெண்கள்

## குடியரசுத் தலைவர் முர்மு நம்பிக்கை

**புது தில்லி, ஜூலை 1:** 2047–ஆம் ஆண்டு இந்தியா 100–ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும்போது, நாட்டிலுள்ள பட்டயக் கணக்காளர்களில் 50 சதவீதம் பேர் பெண்களாக இருப்பார்கள் என்று நம்புவதாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.



இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ஐசிஏஐ) பட்டயக் கணக்காளர்களின் தலைமை அமைப்பாக உள்ளது. இந்நிலையில், தில்லியில் ஐசிஏஐயின் 75–ஆவது ஆண்டு தொடக்க நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. இதில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கலந்து கொண்டு பேசியதாவது:

பட்டயக் கணக்கு (சிஏ) தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் சுமார் 42 சதவீதம் பேர் பெண்கள் என்றும், அந்தத் தேர்வில் தேர்ச்சி பெறும் பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் என்னிடம் கூறப்பட்டது.

2047–ஆம் ஆண்டு இந்தியா 100–ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும்போது, நாட்டிலுள்ள பட்டயக் கணக்காளர்களில் 50 சதவீதம் பேர் பெண்களாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

வணிகத் துறையின் வலுவான தூண்களில் ஒன்றாக பட்டயக் கணக்காளர்கள் உள்ளனர். அவர்கள் நல்ல நிர்வாகத்துக்கு வலுசேர்க்கின்றனர். பொருளாதாரத்தின் உண்மையான ஆரோக்கியத்தை பிரதிபலிக்க வேண்டிய முக்கியமான பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

ஊரகப் பகுதிகளில் சேமிப்புக்கு அதிக வட்டி தருவதாக ஆசைகாட்டப்பட்டு ஏழைகளும், அப்பாவி மக்களும் ஏமாற்றப்படுகின்றனர்.

இந்நிலையில், பெண்களுக்காக 'நிதி மற்றும் வரிக் கல்வியறிவு' பிரசாரத்தை ஐசிஏஐ தொடங்கியுள்ளது. இந்த பிரசாரம் ஊரக பகுதிகளுக்கு, குறிப்பாக பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. இந்த பிரசாரம் சேமிப்புக்கு அதிக வட்டி தருவதாக கூறி செய்யப்படுவது போன்ற மோசடிகளில் இருந்து மக்களைக் காப்பாற்றும் என்றார் அவர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

'தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்' இயக்குநர் உள்பட

# இந்திய சூழலியல் ஆர்வலர்களுக்கு விருது

**பிரிட்டன் அரசர் வழங்கினார்**

**லண்டன், ஜூலை 1:** ஆஸ்கர் விருது பெற்ற 'தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்' ஆவண குறும்படத்தின் இயக்குநர் கார்த்திகி கொன்சால்வஸ் உள்பட இந்திய சூழலியல் ஆர்வலர்களுக்கு பிரிட்டன் அரசர் சார்லஸ், அரசி கமீலா ஆகியோர் சுற்றுச்சூழல் விருது வழங்கி கௌரவித்தனர்.

பிரிட்டனை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் 'எலிஃபன்ட் ஃபேமிலி' என்ற சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் சார்பில் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் முதுமலை வனப் பகுதியில், தாயைப் பிரிந்த யானைக் குட்டிகளைப் பராமரிக்கும் பழங்குடியின தம்பதியின் வாழ்க்கையையும், யானைக் குட்டிகள் மற்றும் தம்பதிக்கு இடையிலான உறவையும் உணர்வுபூர்வமாகபதிவுசெய்திருந்த 'தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்' ஆவண குறும்படம் கடந்த மார்ச்சில் ஆஸ்கர் விருது வென்றது. ஆவண குறும்பட பிரிவில் ஆஸ்கர் விருது வென்ற முதல் இந்தியப் படைப்பு இதுவாகும்.

இந்த ஆவண குறும்படத்தின் இயக்குநர் கார்த்திகி கொன்சால்வஸ் உள்பட இந்திய சூழலியல் ஆர்வலர்களுக்கு, லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்பட்டன.

கார்த்திகிக்கு 'தாரா' விருதும், நீலகிரியில் செயல்படும் தி ரியல் எலிஃபன்ட் கலெக்டிவ் (டிஆர்இசி) எனும் தன்னார்வ அமைப்பைச் சேர்ந்த 70 பழங்குடியின கைவினைக் கலைஞர்களுக்கு 'மார்க் ஷண்ட்' விருதும் வழங்கப்பட்டது. பிரிட்டன் அரசர் சார்லஸ்–அரசி கமீலா ஆகியோர், விருதுகளை வழங்கி கௌரவித்தனர்.

ஆசிய யானைகளை அழிவிலிருந்து காப்பதை நோக்கமாக கொண்ட எலிஃபன்ட் ஃபேமிலி தன்னார்வ நிறுவனத்தின் நிறுவனர், மார்க் ஷண்ட் பெயரில் இந்த விருது வழங்கப்படுகிறது. இவர், பிரிட்டன் அரசி கமீலாவின் மறைந்த சகோதரர் ஆவார்.



லண்டனில் குறும்பட இயக்குநர் கார்த்திகி கொன்சால்வஸுக்கு விருது வழங்கிய பிரிட்டன் அரசர் சார்லஸ், அரசி கமீலா.

விருது பெற்றவர்களை பாராட்டி, 'எலிஃபன்ட் ஃபேமிலி வெளியிட்ட அறிக்கையில், 'இந்திய வனங்களின் அழகு, பழங்குடியின மக்களின் அறிவுநுட்பம், ஒரே வாழ்விடத்தை பகிர்ந்து கொள்ளும் மக்கள் மற்றும் விலங்குகள் இடையிலான புரிதலுணர்வு ஆகியவற்றின் சாட்சியாக தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ் ஆவணப்படம் திகழ்கிறது' என்று கூறப்பட்டுள்ளது.

அதேபோல், மக்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையே தனித்துவமான புரிதல், சகவாழ்வை வளர்த்தெடுத்த பணிக்காக, டிஆர்இசி தன்னார்வ நிறுவனம் பாராட்டப்பட்டுள்ளது.

காடுகளில் வளரும் களைத் தாவரத்தை பயன்படுத்தி, தத்ரூபமான யானை சிலைகள் உள்ளிட்ட கைவினைப் பொருள்களை உருவாக்கி, அதன் மூலம் பழங்குடியின கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**